# “ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற நமது பேராசான் பேரறிஞர் அண்ணாவின் முழக்கத்தை மெய்ப்பிக்கின்ற வகையில் – நமது முதல்வர்

# புரட்சிகரமான திட்டங்கள் பல தீட்டி சிறுபான்மையின மக்களைக் காத்து வருகிறார்!

## சட்டப்பேரவையில் – சிறுபான்மையினர் நலன் – வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் சா.மு.நாசர் பெருமிதம்!

**சென்னை, மே 1 -**

**சட்டப்பேரவையில், சிறுபான்மையினர் நலன் - வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற நமது பேராசான் பேரறிஞர் அண்ணாவின் முழக்கத்தை மெய்ப்பிக்கின்ற வகையிலும், நமது முதல்வர் அவர்கள் புரட்சிகரமான திட்டங்கள் பல தீட்டி சிறுபான்மையின மக்களைக் காத்து வருகிறார்" என்று அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேசியதாவது:-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுலக மேதை அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த, நம்மைப் பாதுகாத்து வழிநடத்திச் செல்கின்ற, இந்திய அரசியல் வானில் துருவநட்சத்திரமாகத் திகழும் திராவிட மாடல் நாயகர் தலைவர் அவர்களையும், நம் திராவிட இயக்கத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் இளம் தலைவர் துணை முதல்வர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவை முன்னவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைக் கூறி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட அயலகத் தமிழர் நல வாரியம் உலகெங்கும் இருக்கின்ற தமிழர் அமைப்புகளை அங்கீகரித்து, ஒருங்கிணைத்து உலகத் தமிழர்களை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து சாதனை படைத்திருக்கிறது. அது மட்டுமல்ல, அயலக தமிழர் தினம் கொண்டாடுதல், வெளிநாடு வாழ் தமிழர்களின் குழந்தைகளுக்கு நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை கற்பித்தல் என்றெல்லாம் உன்னதமான பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

வேர்களைத் தேடி என்றும், தமிழர் தடம் என்றும், தமிழ் மனம் என்றும், எனது கிராமம் என்றும், தொப்புள் கொடி உறவுகளை இணைக்க நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்ற இலட்சிய திட்டங்களுக்கு உலக தமிழர்கள் சார்பாக எனது சிரம் தாழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழர்களை அகதி என்று சொல்லக் கூடாது என்ற எண்ணத்தோடு அண்ணனுக்கு அண்ணனாய், தம்பிக்கு தம்பியாய், நான் இருக்கின்றேன் என்று கூறி அகதிகள் முகாம் என்பதனை மறுவாழ்வு முகாம் என்று மாற்றியமைத்த பெருமைக்குரியவர் நம்முடைய திராவிட மாடல் நாயகர், தளபதி அண்ணன் தமிழ்நாடு முதல்வர் அவர்கள்.

தாய்போன்ற அவரது அருங்குணத்தால் கடந்த நான்கு ஆண்டுகளில் வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களுக்குச் சென்று அங்கு எதிர்பாராத விதமாக அங்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளின் காரணமாக சிக்கி தவித்த சுமார் 2,494 தமிழர்கள் தாயகம் மீட்கப்பட்டுள்ளனர். அதேபோல, கடந்த நான்கு ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு



கோடியே, 64 இலட்சத்து, 49 ஆயிரம் ரூபாய் செலவில் 3,959 வீடுகள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில் 236 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், 486 வீடுகள் கட்டி முடிக்கக்கூடிய ஒப்படைக்க தயார் நிலையில் உள்ளது என்பதையும் இப்பேரவையில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் திட்டத்தின் தொடர்சியாக நடப்பு நிதியாண்டில் மூன்றாம் கட்டமாக 3,000 வீடுகள் கட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அதனையும் செயல்படுத்தி முடிக்க தயார் நிலையில் உள்ளது இந்த திராவிட மாடல் அரசு என்பதையும் இப்பேரவையில் பதிவு செய்கின்றேன்.

அதேபோல இலங்கைத் தமிழர்களின்

**3)TNSKILLS இன்டர்நேஷனல்-உலகளாவிய தொழில் வாய்ப்புகளுக்கு தமிழ்நாட்டினரை மேம்படுத்துதல்.**

வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம் (NRTWB), தமிழ்நாடு அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (TNOMCL) மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் மற்றும் பள்ளி இறுதி ஆண்டு முடித்தவர்களுக்கு உலகளாவிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கித் தரும் நோக்கத்தை வழிநடத்த TNSKILLS இன்டர்நேஷனல் நிறுவப்படும்.

இத்திட்டத்தின் மூலம், சுகாதாரம், கட்டுமானம், உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் போன்ற துறைகளில் சிறப்பு கவனம் செலுத்தியும், ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் அரபு மொழிகளில் பேச மற்றும் எழுதுவதற்கான பயிற்சியும் அளிப்பதன் மூலம் திறமையான நபர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் எளிதாக்கப்படும். ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஐக்கிய பேரரசு (UK), சிங்கப்பூர் மற்றும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (GCC) நாடுகள் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தரும்.

சிறப்பு பயிற்சி, இடம்பெயர்வு உதவி மற்றும் தொழில் ஆதரவை வழங்க சிறந்த பயிற்சி மையங்கள் நிறுவப்படும். இந்த முயற்சி உலகளாவிய வேலைவாய்ப்பையும், அதிக வருமான வாய்ப்புகளையும், அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு திறமையான நபர்களின் முக்கிய மையமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்தும்.

**4)வெளிநாடுகளில் வேலைக்குச் சென்று இறந்த வறிய நிலையில் உள்ள அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அளித்தல்.**

வெளிநாடுகளில் வேலைக்குச் சென்ற

பான்மையின மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மூன்றாம், நான்காம், ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவிகளுக்கு 500 ரூபாய் மற்றும் ஆறாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு 1,000 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இதுவரை 97,893 மாணவியருக்கு 6 கோடியே 26 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு, சிறுபான்மையின மாணவ மாணவியருக்கு ஏற்கெனவே வழங்கி வந்த கல்வி உதவித்தொகையினை நிறுத்தி விட்டது. எனவே, மாநில அரசு இந்த ஆண்டு, 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவிகளுக்கு 1,000 ரூபாய் கல்வி உதவித்தொகை, வக்ஃப் வாரியம்மூலம் வழங்க 12 கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,26,256 மாணவிகள் பயன்பெறுவர்.

கிராமப்புறங்களைச் சேர்ந்த சிறுபான்மையின மாணவியர்கள் நகர்ப்புறங்களில் தங்கி கல்வி பயில 20 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் மற்றும் புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிலிருந்து கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் வழங்கும் பணி இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 312 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை கல்வி அந்தஸ்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 246 சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியமாக ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூபாய் 80 இலட்சமாக உயர்த்தி

தொன்மையான தர்காக்கள் புனரமைப்பதற்கும் சேர்த்து இதுவரை 33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 318 வக்ஃபு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, 2023-2024 ஆம் ஆண்டில் கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் இல்லாத மாவட்ட தலைநகரங்களில் தேவைப்படும் நிலத்தை மாவட்ட நிர்வாகத்தின்மூலம் கையகப்படுத்தி, மாநகராட்சி, நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டங்கள் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அறிவிப்புகள்

**சிறுபான்மையினர் நலன்**

**1.சென்னை, திருநெல்வேலி, கரூர் மற்றும் சிவகங்கை ஆகிய 4 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 3 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் புதிதாக துவக்குதல்**

முஸ்லீம் மற்றும் கிறித்துவ மகளிரின் நலனைக் கருத்திற்கொண்டு, சென்னை, திருநெல்வேலி, கரூர் மற்றும் சிவகங்கை ஆகிய 4 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 3 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் புதிதாக துவங்குவதுடன் இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ஒரு இலட்சம் வீதம் 7 சங்கங்களுக்கு ரூபாய் 7 இலட்சம் வழங்கப்படும்.

**2. கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களில் உள்ள பழுதடைந்த சுற்றுச்சுவர்களை சீரமைத்தல், புதிதாக சுற்றுச் சுவர் அமைத்தல் மற்றும் பாதைகளை புனரமைக்க நிதியுதவி வழங்குதல்**

தமிழகத்திலுள்ள கிறித்துவர் மற்றும் இஸ்லாமியர் சமுதாயத்தினர் இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடமான கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களில் உள்ள பழுதடைந்த சுற்றுச்சுவர்களை சீரமைத்தல், புதிதாக சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் பாதைகளை புனரமைக்க முதற்கட்டமாக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## புத்த – சமண மற்றும் சீக்கிய மக்களின் புனிதப் பயணத்திற்கு மானிய உதவி!

## அயலகத் தமிழர் நல வாரியம் உலகெங்கும் இருக்கின்ற தமிழர் அமைப்புகளை அங்கீகரித்து, ஒருங்கிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து சாதனை!

ஏறக்குறைய 140 கோடி கத்தோலிக்க மக்களுடைய கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராக இருந்த போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவையொட்டி, ரோம் நகர், வாட்டிகனில் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் அன்னாருக்கு மரியாதை செலுத்த, தமிழக கிறித்தவ மக்களின் பிரதிநிதியாக நானும், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் அவர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வில், தமிழக முதல்வர் அவர்களை கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் அங்கிருந்த கார்டினல்கள் அனைவரும் கேட்டறிந்தவிதம், அங்கு சென்றவுடன் அவர்களெல்லாம் கேட்டார்கள், அவர்களெல்லாம் வாக்களிக்கக் கூடியவர்கள், அந்த வாக்களிக்கக்கூடிய கார்டினல்கள் அனைவரும் எங்களிடம் விசாரித்து, “எங்கிருந்து வருகிறீர்கள்?” என்று கேட்டார்கள். ‘நாங்கள் இந்தியாவிலிருந்து வருகிறோம்’ என்றோம். அவர்கள் ‘இந்தியாவில் எங்கிருந்து வருகிறீர்கள்?’ என்று கேட்டார்கள். நாங்கள் தமிழ்நாட்டிலிருந்து வருகிறோம் என்றோம். தமிழ்நாட்டில் எங்கிருந்து வருகிறீர்கள்? என்று கேட்டார்கள். நாங்கள் தமிழக முதல்வர் அவர்களின் பெயரைக் கூறியதும், அவர்கள் பெருமையாக, அவர்கள் அனைவருமே முன்வந்து பேட்டி கொடுத்தார்கள்.

> **‘உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
> **இடுக்கண் களைவதாம் நட்பு.’**

என்கிறது திருக்குறள். அதுபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறுவான்மையின மக்கள் அவர்கள் நம்முடைய போப் அவர்களுடைய மரணத்தை கேட்டவுடன் எங்கள் இருவரையும் அங்கே அனுப்பி வைத்து, அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த வைத்த, தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ரோம் நகர், வாட்டிகனில் நடைபெற்ற கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்க தமிழ்நாடு அரசின் சார்பில் என்னையும், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் அவர்களையும் அனுப்பிவைத்த முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற கணியன் பூங்குன்றனாரின் பொன்மொழிக்கேற்ப ‘வாராது வந்த மாமணி’ திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமல்லாது உலகெங்கும் வாழ்கின்ற நம் தொப்புள் கொடி உறவுகளாம் புலம்பெயர் தமிழர்கள் நலனிலும் தாய்போல் அக்கறைக் கொண்டு செயல்படுத்துகின்ற திட்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. அது எண்ணற்ற திட்டங்களாய் எல்லையற்று நீள்கிறது என்பதனை நாடறியும், ஏடறியும். அந்த தாயுமானவரை போற்றுவதற்கு வார்த்தைகள் இல்லை.

தமிழர்களின் வாழ்வு உயர ஊண் உறக்கமின்றி உழைக்கின்ற உத்தமத் தலைவரை போற்றுகின்றேன். முத்தமிழறிஞர் நமது தலைவர் கலைஞர் அவர்கள் அயலக தமிழர் நல வாரியம் அமைப்பதற்குத் திட்டமிட்டார். அந்தத் திட்டத்தைச் செயல் வடிவமாக்கியவர் நமது முதலமைச்சர் தளபதி ஆவார். அதற்கு கோடான கோடி நன்றிகளை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

பணி நிமித்தம் சென்று காலமாகிவிட்ட ஏறத்தாழ 1,237 தமிழர்களின் உடல்களை தாயகம் கொண்டுவருவதற்கு பேருதவி புரிந்து, அவர்களின் குடும்பத்தாரிடம் ஒப்படைப்பதற்கு இந்தத் திராவிட மாடல் அரசு சகோதரத்துவ மனப்பான்மையோடு துணை நின்றுள்ளது என்பதனை பதிவு செய்துகொள்கிறேன்.

“இந்த ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் தேதி ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வரும் அயலகத் தமிழர் தினத்தில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் துணை முதலமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு உலக தமிழர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து வாழ்த்தியனுப்பிய காட்சி கண்கொள்ளாக் காட்சி. நம்முடைய தலைவரின் ஈடற்ற அந்த சகோதரத்துவ பண்பினை நான் போற்றி வணங்குகின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2024-2025-ஆம் நிதியாண்டில் 6 கோடியே, 13 இலட்சத்து, 69 ஆயிரத்து 924 ரூபாய் செலவில் முகாம்களில் வசிக்கும் 19,551 இலங்கை தமிழர்களுக்கு ஆடைகள் வழங்கினோம். அது மட்டுமல்ல, 2023-2024 ஆம் நிதியாண்டில் 19,498 குடும்பங்களுக்கு 2 கோடியே, 50 இலட்சத்து, 54 ஆயிரத்து, 930 ரூபாய் செலவில் பயன்பாட்டிற்குரிய பாத்திரங்களை வழங்கி நம் சகோதரர்களுக்கு நம்பிக்கை கொடுத்தது நம்முடைய திராவிட மாடல் அரசு. அதுமட்டும் போதாது என்று நினைத்த நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2024-2025 ஆம் நிதியாண்டில் 15,896 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு தலா 5 இலவச எரிவாயு உருளைக்கான மானியத் தொகை 3 கோடியே 17 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் வழங்கி அவர்களுக்கு ஓர் ஊக்க சக்தியாக விளங்குகின்றார் என்பதனை இந்த பேரவையிலே பதிவு செய்கின்றேன்.

மேலும், 2023-2024 ஆம் நிதியாண்டில் முகாம்களில் வாழ்கின்ற 1,944 இலங்கை தமிழ் மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகை 3 கோடியே 76 லட்சத்து 5 ஆயிரத்து 365 ரூபாய் வழங்கியுள்ளது நமது திராவிட மாடல் அரசு. அவர்கள்மீது மேலும் அன்பு கொண்டு முகாம்களில் வசிக்கின்ற 200 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரம் வீதம் ரூபாய் 2 கோடியே 50 இலட்சத்தினை வழங்கியுள்ளது நம்முடைய அரசு.

முகாம்களில் வசிக்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் முதல் கட்டத்தில் 176 கோடி ரூபாய் செலவில் 3,510 வீடுகள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில் 2,757 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு சாதனை படைத்துள்ளது நமது அரசு. மேலும், 753 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்க தயார் நிலையிலும் இந்த அரசு வைத்துள்ளது என்பதை இப்பேரவையிலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிரக்கின்றேன்.

இதன் இரண்டாம் கட்டமாக 228

## அயலகத் தமிழர் மருத்துவச் சுற்றுலாத் திட்டம்!

முகாம்களில் குடிநீர், கழிவுநீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும், கட்டமைப்புகளையும் மேம்படுத்த கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 30 கோடி வழங்கப்பட்ட நிலையில் ஆண்டுதோறும் இலங்கைத் தமிழர் வாழ்க்கைத்தரம் மேம்பட மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் பணிவோடு இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்கின்ற நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கான வழிகாட்டுதலால் இவையெல்லாம் சாத்தியப்பட்டிருக்கின்றன என்பதையும் அழுத்தந்திருத்தமாக இப்பேரவையில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய செயல்பாடுகளை எல்லாம் மிகுந்த கவனத்துடன் கூர்ந்து நோக்கி உரிய வழிகாட்டுதலை நம் நம்பிக்கை நட்சத்திரமாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார் என்பதையும் நான் நன்றிப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இனிய தருணத்தில் பொது மறுவாழ்வு மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை சார்பாக நான்கு அறிவிப்புகளை இம்மன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

### அறிவிப்புகள்

**பொது (மறுவாழ்வு)த் துறை**

**1) இலங்கை தமிழர் முகாம்களில் கணினி வசதிகளுடன்கூடிய படிப்பகம் அமைத்துக் கொடுத்தல்.**

முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களிடையே கல்வி கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கவும், இடைநிற்றலைத் தவிர்க்கவும், முதற்கட்டமாக 25 முகாம்களில், முகாம் ஒன்றிற்கு ரூ.1,99,500 வீதம் 25 முகாம்களில் ரூ.49,87,500 மதிப்பீட்டில் கணினி வசதியுடன் கூடிய படிப்பகம் அமைக்கப்படும். இந்த படிப்பக கட்டடம் 600 சதுர அடியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நிதியின் மூலம் கட்டித்தரப்படும்.

இதன் மூலம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களிடையே கல்வி கற்றல் மற்றும் திறன் வளர்ச்சி மேம்படுத்தப்படும்.

**2)அயலகத் தமிழர் மருத்துவச் சுற்றுலா திட்டம் செயல்படுத்துதல்.**

அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு Medical Facilitation Cell அமைக்கப்படும். இதன் மூலம் வாரிய உறுப்பினர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள மருத்துவமனைகளுடனான இணைப்பு அதாவது, சிகிச்சை முன்பதிவு, தங்கும் வசதி, மொழி உதவி உள்ளிட்ட அனைத்தையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில், உலக தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து இத்திட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் உதவியோடு செயல்படுத்தப்படும்.

## இலங்கைத் தமிழர் முகாம்களில் கணினி வசதிகளுடன் படிப்பகங்கள்!

அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் திடீரென்று மரணம் எய்தும் நிலையில், வறிய நிலையில் உள்ள அவர்களது குடும்பத்தினருக்கு நிதியுதவியாக ரூ.1,00,000 வீதம் வழங்கப்படும். இச்செலவினம் தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

சிறுபான்மையினர் நலத் துறை. இந்திய மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலமாக நமது தமிழ்நாட்டினை உயர்த்தி உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்துள்ள பெருமையை நமது தமிழ்நாடு முதலமைச்சர் நமக்கெல்லாம் தந்திருக்கிறார். அத்தகைய வளர்ச்சி பாதையில் வழி நடத்தும் நாயகர்.

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களை பாதுகாக்கின்ற கொள்கையில் உறுதிகொண்டவர் நம் தலைவர். சிறுபான்மையின மகளிர் வாழ்வில் வளம் பெற முஸ்லீம், கிறித்தவ மகளிர் உதவும் சங்கத்தை உருவாக்கியவர் நம் தலைவர். அந்த கனிவிற்கும், கருணைக்கும் நன்றி கூறுகின்றேன்.

‘தோன்றின் புகழொடு தோன்றுக’ என்ற வான்புகழ் வள்ளுவரின் பொய்யாமொழிக்கு இலக்கணமான நம் தலைவர். சிறுபான்மையின மக்களை பாதுகாக்க நமது தலைவர் முதலமைச்சர் அவர்கள் தீட்டிய திட்டங்களை எடுத்துக் கூற வேண்டுமென்றால் ஒரு பட்டியல் அல்ல பல புத்தகங்கள் போட வேண்டும்.

திராவிட இயக்கத்தின் சமூக நீதிச் சிந்தனைகளை ஒவ்வொரு திட்டத்திலும் பறைசாற்றி வருகின்ற இந்த திராவிட மாடல் அரசு ‘ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்ற நமது பேராசான் பேறறிஞர் அண்ணா அவர்களின் முழக்கத்தை மெய்ப்பிக்கின்ற வகையிலே திட்டங்கள் தந்து பெரும் புரட்சியை செய்து வருகின்ற நம்முடைய முதல்வரை வாழ்த்துவதற்கு வார்த்தைகள் இல்லை. வணங்குகின்றேன்.

அந்தவகையில் சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டினை வளப்படுத்தும் நோக்கத்தோடு, 2021-2022 ஆம் ஆண்டு முதல் சிறுபான்மையின மகளிருக்கு மின் மோட்டாருடன்கூடிய 6,000 தையல் இயந்திரங்கள் 3 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் பயிற்சி அளித்து மின் மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கவும், இடைநிற்றலைக் குறைக்கவும் 2022-2023 ஆம் ஆண்டு முதல் கிராமப்புற சிறு

வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 2025-2026 ஆம் ஆண்டில் 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு முதல் ஹஜ் பயனாளி ஒருவருக்கு ரூ.25,000/- வீதம் ஹஜ் மானியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்திலிருந்து 11,364 ஹஜ் பயனாளிகள் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதற்காக அரசு 24 கோடியே 56 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கியுள்ளது. அதன்படி 2025-2026 ஆம் ஆண்டுகளில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள இஸ்லாமியப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக சென்னை விமான நிலையம் அருகில் நங்கநல்லூரில், 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்பட்டு, இன்றையதினம் அதற்கான அறிவிப்பாணை வெளியிடப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிறித்துவர்களின் புனித தலமான இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் செல்வதற்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினருக்கும் அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு 60 ஆயிரம் ரூபாய், இதர நபர்களுக்கு 37 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 8 கோடியே 25 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2024-2025 ஆம் ஆண்டில் 140 பௌத்த சிறுபான்மையினர் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெற்ற தம்ம சக்கர பரிவர்தன விழாவில் கலந்து கொள்ள போக்குவரத்து கட்டணத்திற்காக 7 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் அரசு நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும், காஞ்சிபுரத்தில் புத்தர் திருக்கோயிலில் நடைபெற்ற பன்னாட்டு திரிபீடகங்கள் ஓதும் நிகழ்ச்சிக்காக அரசு நிதியுதவி ரூபாய் 5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டிலிருந்து தொன்மையான கிறித்தவ தேவாலயங்கள் புனரமைத்தல் திட்டத்திற்கு இதுவரை 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8 கிறித்தவ தேவாலயங்களுக்கு 14 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. 2025-2026 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் மீண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிறித்தவ தேவாலயங்கள் புனரமைத்தல் பணிகளுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 41 கிறித்தவ தேவாலயங்களுக்கு 2 கோடியே 41 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிலிருந்து பள்ளிவாசல்கள், தர்காக்களின் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளுக்கும் மற்றும்

**3.சிறுபான்மையின மாணவ, மாணவியர் வெளிநாடுகளில் பட்ட மேற்படிப்பு மேற்கொள்ள கல்வி உதவித் தொகை வழங்கும் புதிய திட்டம் துவங்குதல்**

சிறுபான்மையின மாணவ, மாணவியர் வெளிநாடுகளில் பட்ட மேற்படிப்பு மேற்கொள்ள ஏதுவாக ஆண்டுக்கு 10 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித் தொகை வழங்கிட புதிய திட்டம் வகுக்கப்படும்.

**4.சிறுபான்மையின புத்த சமயத்தினர் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவில் கலந்து கொள்ள மானிய உதவி வழங்குதல்**

பௌத்த சிறுபான்மையினர் நாக்பூர் தீக்ஷா பூமியில் விஜயதசமி அன்று நடைபெறும் தம்ம சக்கர பரிவர்தன திருவிழாவில் கலந்து கொள்ள ஆண்டுதோறும் நபர் ஒருவருக்கு ரூ.5,000/- வீதம் 150 நபர்களுக்கு ரூபாய் 7 இலட்சத்து 50 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

**5.புத்த, சமண மற்றும் சீக்கிய மக்களுக்கான புனித பயணத்திற்கு மானிய உதவி வழங்குதல்**

தமிழ்நாட்டில் உள்ள முஸ்லிம்களுக்கு சவுதி அரபியாவில் உள்ள புனித தலமான மக்கா மற்றும் மதினா, கிறித்தவர்களுக்கு இஸ்ரேலில் உள்ள ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள அரசு நிதியுதவி வழங்கப்படுவதைப் போன்று, 50 புத்த மதத்தினர், 50 சமண மதத்தினர் மற்றும் 20 சீக்கிய மதத்தினர் இந்தியாவிலுள்ள அவரவர் மதங்களுக்கான புனித தலங்களுக்கு புனித பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் நபர் ஒருவருக்கு ரூ.10,000/- வீதம் 120 நபர்களுக்கு ரூபாய் 12 இலட்சம் மானியம் வழங்கப்படும்.

**6.வக்ஃப் சொத்துக்களின் நில அளவை பணிகளை விரைவுப்படுத்த கூடுதலாக 20 உரிமம் பெற்ற நில அளவையர்கள் நியமனம் செய்தல்**

மாநிலம் முழுவதும் உள்ள வக்ஃப் சொத்துக்களின் நில அளவை பணிகளை முடிக்கவும், Collabland மென்பொருளில் நில அளவை செய்யப்பட்டுள்ள வக்ஃப் சொத்துக்களின் தரவை பதிவேற்றவும், கூடுதலாக 20 உரிமம் பெற்ற நில அளவையர்கள் நியமனம் செய்யப்படுவர். இதற்காக ரூபாய் 2 கோடியே 28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7.பெருமராமத்து மற்றும் பழுதுபார்ப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியத்தினை உயர்த்தி வழங்குதல்**

பெருமராமத்து மற்றும் பழுதுபார்ப்பு திட்டத்தின்கீழ் பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை புனரமைக்கும் பொருட்டு வழங்கப்படும் மானியத் தொகை ரூபாய் 10 கோடியிலிருந்து ரூபாய் 15 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் சா.மு.நாசர் பதிலளித்துள்ளார்.

## ‘அகதிகள் முகாம்’ என்பதை ‘மறுவாழ்வு முகாம்’ என்று மாற்றியமைத்த பெருமைக்குரியவர், நம்முடைய திராவிட மாடல் நாயகர், தளபதி அவர்கள்!

## இலங்கைத் தமிழர் முகாம்களில் குடிநீர், கழிவுநீர், மின்சாரம் உள்ளிட்ட கட்டமைப்புகள் ரூ.30 கோடியில் மேம்படுத்தப்பட்டுள்ளது!